மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவதை உடனடியாக நிறுத்திவைக்கச் சொல்லி சவுதியரேபிய அரசாங்கம் உத்தரவிட வேண்டும் என்றும் நாட்டின் சட்ட மற்றும் நீதி நிர்வாக நடைமுறைகளை சர்வதேச தரங்களுக்கு ஏற்ப உயர்த்த வேண்டும் என்றும் சர்வதேச பொது மன்னிப்பு சபை கேட்டுக்கொள்கிறது.

அவர் மீதான மேல்முறையீடு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், மரண தண்டனை வழங்கும் ஒரு நீதிமன்றத்தால் இவ்வழக்கு மறுவிசாரணை செய்யப்பட வேண்டும் என்று இப்போதும்கூட உத்தரவிடப்படலாம். சுல்தான் கொஹெய்லுக்கும் மரண தண்டனை விதிக்கப்படும் ஒரு நிஜமான ஆபத்து இருக்கவே செய்கிறது.

**மாற்றத்துக்கான நேரமிது**

மரண தண்டனை விதிப்பதை சவுதியரேபியா தொடர்ந்தும் மிக அதிகமாகப் பயன்படுத்திவருகிறது. அந்த நாட்டின் தண்டனைக் கொள்கைகள் கடுமையாக இருப்பதன் விளைவு இது. சவுதியரேபியாவின் குற்றவியல் நீதி நிர்வாகம் பெருமளவில் இரகசியமானதும் மற்றும் பிழைதடுப்பு வழிமுறைகளற்ற அவசரகோலமானதும் ஆகவே உள்ளது. சமூகத்தின் பலவீனமான பிரிவினருக்கே மரண தண்டனை அதிக அளவில் விதிக்கப்படுகிறது என்ற பாரபட்சம் அங்கே காணப்படுகிறது. சிறார் குற்றவாளிகளுக்கு எதிராகவும் மிக்க் கடுமையான தண்டனைகள் அங்கு தொடர்ந்தும் விதிக்கப்படுகிறது. சவுதியரேபியாவில் காணப்படும் இத்தகைய போக்குகள் சர்வதேச தரங்களில் இல்லை என்பதோடு, மரண தண்டனைக்கு எதிராக பிற இடங்களில் காணப்படும் போக்குகளுக்கு எதிரானதாகவும் உள்ளது. சர்வதேச விதிமுறைகளை சவுதியரேபியா கடுமையாக மீறிவரும் நிலையில், மரண தணடனைகளை நிறைவேற்றுவதை நிறுத்திவைக்கச்சொல்லி சவுதியரேபிய அரசாங்கம் உத்தரவிட வேண்டும் என்றும் நாட்டின் சட்ட மற்றும் நீதி நிர்வாக நடைமுறைகள் சர்வதேச தரங்களுக்கு உயர்த்தப்படும் நோக்கில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை வலியுறுத்துகிறது.

## ஹாதி சையீத் அல்-முதீஃப்



© Private

1994ஆம் ஆண்டில் ஹாதி சயீத் அல் முத்தீஃப் என்ற சவுதியரேபியப் பிரஜை, இஸ்லாத்துக்கும் ஷரியா சட்டத்துக்கும் முரணானதாக பார்க்கப்படும் கருத்துகளை சொன்னார் என்று குற்றம்சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டார். 1997ஆம் ஆண்டில் இவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. பத்து ஆண்டுகள் கழித்து, ஜனவரி 2007ல், இவருக்கு பூரண மன்னிப்பு வழங்குவது குறித்து சவுதியரேபிய அதிகாரிகள் பரிசீலிப்பதாக அனைத்துலக பொதுமன்னிப்பு சபைக்கு தகவல்கள் கிடைத்திருந்தன. ஆனால் அவ்வாண்டு ஜூலை மாதம், அவர் இன்னும் மரண தண்டனையை எதிர்கொள்ளவே செய்கிறார் என்ற விபரம் தெளிவானதும், அவருக்கு மன்னிப்பு கிடைக்கலாம் என்ற நம்பிக்கைகள் தகர்ந்துபோயின. கைதுசெய்யப்பட்டு 14 ஆண்டுகள் கடந்தும், தெளிவில்லாத வார்த்தைகளால் விபரிக்கப்பட்ட ஒரு குற்றச்செயலுக்காக ஏற்கனவே மரண தண்டனைக் கைதியாகி 11 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் இன்னும்கூட தனது எதிர்காலம் குறித்த ஒரு நிச்சயமற்ற ஒரு சூழலை ஹாதி சயீத் அல் முத்தீஃப் எதிர்நோக்குகிறார். சவுதியரேபியாவின் தென்பகுதியிலுள்ள நஜ்ரன் சிறையில் அடைபட்டிருக்கும் அவர், தனக்கு எப்போது மரண தண்டனை வரும் என்பது தெரியாமல் கவலையில் காலம் கழித்துவருகிறார்.

ஹாதி சையீத் அல்-முதீஃபுக்கு 1997ல் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

## பரிந்துரைகள்

**சர்வதேச பொதுமன்னிப்பு சபை சவுதியரேபிய அரசாங்கத்திடம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கிறது:**

- ஐ.நா. பொதுச்சபை டிசம்பர் 2007ல் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவதை உடனடியாக நிறுத்திவைக்கச் சொல்லி உத்தரவிட வேண்டும்.
- சிறார்களுக்கான உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் 37(a) ஷரத்திற்கு இணங்க சிறார்களுக்கு மரண தண்டனை வழங்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.
- மரண தண்டனையை பெறக்கூடிய குற்றப் பிரிவுகளின் எண்ணிக்கையைக் சட்டங்களிலிருந்து தொடர்ந்து குறைத்துவர வேண்டும். மரண தண்டனையை எதிர்கொள்ளும் நபரின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையிலான ஐ.நா.மன்ற பாதுகாப்பு வழிமுறைகளுக்கு ஏற்ப நாட்டிலே மரண தண்டனை விதிக்கின்ற சட்டங்கள் மற்றும் நடைமுறை விதிகளில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். (25 மே 1984 அன்றைய ஐ.நா.மன்ற பொருளாதார மற்றும் சமுதாய மன்றத்தின் தீர்மானம் எண் 1984/50); மற்றும்
- தற்சமயம் மரண தண்டனையை எதிர்கொள்ளும் நபர்களின் தண்டனையை குறைக்கும் நோக்கில், அவர்களுடைய வழக்குகளை மீளாய்வு செய்ய வேண்டும்.

Amnesty International,
International Secretariat, Peter Benenson House
1 Easton Street, London WC1X 0DW
United Kingdom
www.amnesty.org

Index: MDE 23/031/2008
October 2008

AMNESTY INTERNATIONAL

சர்வதேச பொதுமன்னிப்பு சபையானது மனித உரிமைகள் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு உலகளாவிய இயக்கம். 150க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 22 இலட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் இதில் உள்ளனர்.

மனித உரிமைகள் உலகத் தீர்மானத்திலும் பிற சர்வதேச மனித உரிமைகள் ஆவணங்களிலும் வரையறுக்கப்பட்டுள்ள உரிமைகளை உலகில் ஒவ்வொருவரும் அனுபவிக்க வேண்டும் என்பதே எங்கள் இலட்சியம். மனித உரிமை மீறல்களை ஆராய்ந்து அதற்கு எதிராக பிரச்சாரம் செய்து, உரிமைகளை பரிந்துரைத்து அதற்கு ஆதரவாக மக்களை அணி திரட்டுவதே எங்கள் பணி. சர்வதேச பொதுமன்னிப்பு சபை எந்த ஒரு அரசாங்கத்தையும், அரசியல் கொள்கையையும் எவர் ஒருவருடைய பொருளாதார நலனையும், மதத்தையும் சார்ந்தில்லாத ஒரு சுயாதீன அமைப்பு.

எமது உறுப்பினர்கள் மற்றும் பிறர் வழங்கும் நன்கொடைகளிலிருந்து பெறும் நிதியைக் கொண்டே எமது பணிகளில் பெரும்பகுதி மேற்கொள்ளப்படுகிறது.

# நீதிக்கு அவமதிப்பு

## சவுதியரேபியாவில் மரணை தண்டனையை எதிர்கொள்வோர் யாவர்?

AMNESTY INTERNATIONAL

சவுதியரேபியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள மரண தண்டனைகளின் எண்ணிக்கை கிடுகிடுவென அதிகரித்துள்ளது. 2007ஆம் ஆண்டில் அங்கு குறைந்தபட்சமாக 158 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. 2006ரோடு ஒப்பிடுகையில் இது நான்கு மடங்கு அதிகம். 2008ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 66 மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தவிர மரண தண்டனை வழங்குகின்ற நீதிமன்ற விசாரணைகளும் பெருமளவில் இரகசியமாகவும் நியாயமற்ற ரீதியிலுமே நடத்தப்படுகின்றன. இவ்வகையான நீதிமன்ற நடைமுறைகளும் தீர்ப்புகளும் தண்டிக்கப்படுபவர் மட்டுமல்லாது அவரது குடும்பத்தாருக்கும் பெரும் துன்பத்தை ஏற்படுத்துகின்றன. வன்முறை இல்லாத குற்றங்களுக்காகவும் தெளிவில்லாமல் விபரிக்கப்படும் குற்றங்களுக்காகவும் தண்டனைக்குள்ளானவர்கள்கூட பெரும்பாலும் மரண தண்டனையை எதிர்கொள்ள நேரிடுகிறது. அவசர கதியில் நடத்தப்படும் சிறு விசாரணைகள் மட்டுமே இவர்களுக்கு எதிராக நடத்தப்படுகிறது. இவர்கள் தங்கள் சார்பாக வழக்குரைஞர் வைத்துக்கொள்ள பெரும்பாலும் இடமிருப்பதில்லை. நீதி வழுவாமல் இருப்பதற்கான பாதுகாப்பு நடைமுறைகள் என்பனவும் பெரும்பாலும் இல்லை என்றே சொல்ல வேண்டும். சவுதியரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றம் என்பதும் வழமையாக தலை துண்டிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. அதுவும் பெரும்பாலும் பொதுமக்கள் முன்னிலையில் இவ்வகையில் தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

### பாவப்பட்ட குடியேறிகளுக்கு பாதுகாப்பு இல்லை

சவுதியரேபியாவில் கடந்த 23 ஆண்டுகளில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளவர்களில் பாதிக்கும் அதிகமானவர்கள் வெளிநாட்டுப் பிரஜைகள். மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட வெளிநாட்டவரின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 830 ஆகும். பெரும்பாலும் இவர்கள் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் உள்ள ஏழ்மையான மற்றும் வளர்ந்துவரும் நாடுகளிலிருந்து சென்று குடியேறிய தொழிலாளிகள் ஆவர். உட்சபட்ச தண்டனை விதிக்கப்படுகிறபோதும் பெரும்பாலும் இவர்களுக்கு சட்ட ஆலோசனையோ, தங்கள் தரப்பு வாதத்தை முறையாக எடுத்துரைக்கிற சந்தர்ப்பமோ வழிவகைகளோ வழங்கப்படுவதில்லை. தவிர இவர்களுடைய நாடுகளின் அரசாங்கங்களும் போதிய அளவில் தலையிட்டு நியாயமான முறையில் வழக்கு நடைபெறவேண்டும் என்பதையோ, கருணை காட்டப்பட வேண்டும் என்பதையோ வலியுறுத்த தவறிவந்துள்ளன. குறிப்பாக சவுதியரேபியாவில் குற்றவிசாரணைகள் நடத்தப்படுகின்ற இரகசியப் பாங்கும், அவசரகோல வழிமுறைகளும் வெளிநாட்டு தொழிலாளிகளுக்கு ஆபத்தாக அமைந்துள்ளது. மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு சவுதி பிரஜைக்கு மன்னிப்பு கிடைப்பதில் உள்ள வாய்ப்புகளோடு ஒப்பிடும்போது வெளிநாட்டு தொழிலாளிகளுக்கு மன்னிப்பு கிடைக்கும் வாய்ப்பு குறைவு. உறவினர்கள் போன்றோரின் உதவி ஏதும் இல்லாத ஒரு சூழலில், தனிமையிலும் நிராதரவாகவும் இவர்கள் தம்மீதான சட்ட நடவடிக்கையை எதிர்கொள்கிறார்கள். அரபு மொழியில் மட்டுமாக பெரும்பாலும் மொழிபெயர்ப்பாளரின் சேவை இன்றியே குற்றவிசாரணைகள் நடப்பதால், குற்றம்சாட்டப்பட்டவர்களால் சட்ட நடைமுறைகளை விளங்கிக்கொள்ளவும் தமது தரப்பு வாதத்தை வலிமையாக முன்வைக்கவும் வழியின்றிப் போய்விடுகிறது. வழக்கின் முடிவில் தமக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தையேகூட சிலர் அறிந்துகொள்ளாதிருந்திருக்கிறார்கள். தனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தை தண்டனை நிறைவேற்றப்படுகின்ற தினத்தன்றுதான் அறிந்துகொண்ட துரதிருஷ்ட நிலைகூட சிலருக்கு ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பிரஜைகளானாலும் சரி சவுதியரேபியப் பிரஜைகளானாலும் சரி, குறிப்பாக பெண்கள் பாரபட்சத்தை எதிர்கொள்கிற ஒரு பலவீன நிலையில் இருக்கிறார்கள். சர்வதேச பொதுமன்னிப்பு சபை சேகரித்துள்ள விபரங்களின் படி, 1990ஆம் ஆண்டு முதல் சவுதியில் குறைந்தபட்சம் 40 பெண்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் குறைந்தபட்சம் 40 சதவீதம் பேர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள்: மற்றவருடைய உயிரைப் பலிகொண்ட சம்பவங்கள் இல்லை. இந்த நாற்பது பேரில் பெரும்பான்மையாவர்கள் வறிய நாடுகளிலிருந்து சவுதி வந்து வேலைபார்க்கும் தொழிலாளிகள் ஆவர். சவுதியரேபிய சமூகத்தில் ஆண்களும் பெண்களும் தனித்தனியாகவே கையாளப்படுவது என்பது தீவிரமாகவே கடைப்பிடிக்கப்பட்டாலும், குற்றச்சாட்டுக்கு ஆளான பெண்களைக் கைதுசெய்வதும், விசாரிப்பதும், தீர்ப்பு வழங்குவதும் ஆண்கள்தான். ஆண்களால் பெண்கள் அச்சுறுத்தலுக்கு ஆளாகலாம், துன்புறுத்தலுக்கும் ஆளாகலாம் அல்லது அவ்வாறான பயம் அவர்களுக்கு ஏற்படலாம் என்ற விஷயத்துக்கு அங்கே கொஞ்சமும் மதிப்பளித்து இடம்கொடுத்திருக்கிறார்கள் என்றில்லை.

ஹலீமா நிஸா காதர் மீதான வழக்கு எமது கவனத்தில் உள்ள வழக்குகளில் ஒன்றாகும். அவர் ஒரு இலங்கைப் பெண். 2005 நவம்பரில் அவர் கைதுசெய்யப்பட்டார். பத்திரிகை செய்திகளின் பிரகாரம் பார்க்கையில், ஜூன் 2007ல் ஜித்தாவில் உள்ள ஒரு நீதிமன்றம் அவருக்கும், அவருடைய கணவர் நவுஷத் காதர் என்ற இந்தியப் பிரஜைக்கும், கே.எம்.எஸ்.பண்டாரநாயகே என்ற மற்றுமொரு இலங்கைப் பிரஜைக்கும் மரண தண்டனை விதித்தது. ஒரு பெண்ணின் வீட்டில் நடந்த கொள்ளைச் சம்பவத்தின்போது அவர் கொல்லப்பட்டது தொடர்பாக இவர்கள் மூவர் மீதும் குற்றங்காணப்பட்டுள்ளது. இவர்களுடைய வழக்கின் மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்று கூறப்படுகிறது. ஆனால் அதைத் தவிர கூடுதல் விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. எப்போது வேண்டுமானாலும் மரண தண்டனை நிறைவேற்றப்படுகிற ஒரு ஆபத்து இவர்களுக்கு இருக்கவே செய்கிறது.

## இஸ்ஸா பின் முஹம்மது “உமர் முஹம்மது”



© Private

**பிப்ரவரி 2008ல் மதினா பொது நீதிமன்றம், ஐந்து இளைஞர்களுக்கு மரண தண்டனை விதித்திருந்தது. கொள்ளையடித்ததற்காகவும், ஆட்களை துன்புறுத்தியதற்காகவும் இவர்கள் கைதுசெய்யப்பட்டு குற்றங்காணப்பட்டிருந்தனர். ‘உலகில் குந்தகம் விளைவித்தல்’ ஷரியா சட்டத்திலே என்று விபரிக்கப்பட்டுள்ள குற்றச்செயல்களில் இவர்கள் ஈடுபட்டதாகக் குறிப்பிட்டு நீதிமன்றத் தீர்ப்பில் இவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இவர்கள் ஐந்து பேரில் இருவரான, சுல்தான் பின் சுலைமான் பின் முஸ்லிம் அல்-முவல்லத் என்ற சவுதியரேபியப் பிரஜையும், இஸ்ஸ பின் முஹம்மது உமர் முஹம்மது என்ற சாட் நாட்டுப் பிரஜையும் குற்றம்சாட்டப்படும் சம்பவம் நடந்த சமயத்தில் 18 வயதை எட்டியிருக்கவில்லை. அவர்கள் இருவருக்குமே அப்போது 17 வயதுதான். 18 வயதை எட்டுவதற்கு முன்பாக ஒருவர் இழைத்த குற்றங்களுக்காக அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படுவதை தடைசெய்யும் குழந்தைகளுக்கான உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தை (CRC) சவுதியரேபியா ஏற்றிருதும் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

**இஸ்ஸ பின் முஹம்மது “உமர் முஹம்மது”க்கு (இடது) மரண தண்டனை விதிக்கப்பட்டபோது அவருக்கு 17 வயதே ஆகியிருந்தது.**

நீதிக்கு அவமதிப்பு:
சவுதியரேபியாவில் மரணை தண்டனையை
எதிர்கொள்வோர் யாவர்?

### சவுதியரேபியாவில் மரணதண்டனைக்குள்ளான வெளிநாட்டு பிரஜைகள் (1985 – மே 2008)




> “எனது மகன் … ஏழை, படிப்பறிவில்லாதவன். அரபு மொழி பேசவோ விளங்கிக்கொள்ளவோ தெரியாத அவனுக்கு நீதிமன்ற நடைமுறைகள் பற்றி ஒன்றும் தெரியாது. தனது தரப்பு வாதங்களை எடுத்துக்கூறி தான் நிரபராதி என்று நீதிமன்றத்துக்கு புரியவைக்கிற அளவுக்கு அவனுக்கு விவரமும் தெரியாது. அதைச் செய்வதற்கான வேறு வழிவகைகளும் அவனுக்கு வழங்கப்படவில்லை. முதுமையிலும் பிணியிலும் வாடும் என்னையும், தனது மனைவி மற்றும் தனது நான்கு வயது மகளையும் காப்பாற்றிவருபவன் (அவன்தான்). எங்கள் குடும்பத்தில் சம்பாதிப்பவன் அவன் ஒருவன் தான். (நாங்கள்) அனைவரும் எங்களது ஜீவனத்துக்கு அவனையே நம்பியுள்ளோம்.”
>
> போதை மருந்து சம்பந்தப்பட்ட ஒரு குற்றத்துக்காக மரண தண்டனையை எதிர்கொள்ளும் ஒரு கைதியின் தாயார், 2007ல் சவுதி மன்னர் அப்துல்லாவிடம் விண்ணப்பித்த கருணை மனுவில் இப்படித்தான் மன்றாடியிருந்தார்.

### சிறார்களும் விட்டுவைக்கப்படுவதில்லை

சிறார்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுவதை தடைசெய்யும் சிறப்பான பாதுகாப்பு வழிமுறைகள் சவுதியரேபியாவில் இல்லை. குற்றம்சாட்டப்பட்ட சிறுவன் ஒருவனை எப்போது பெரியவனாகக் கருதலாம் என்பதையும், ஒரு சிறுவனுடைய வயது தண்டனை பெறுவதற்குரிய வயதுதானா என்பதையும் தீர்மானிக்கும் அதிகாரம் நீதிபதிகளிடமே இருக்கிறது. நீதிபதியின் தீர்மானத்தில் இந்த விஷயங்களும் அதிகாரங்களும் இருந்தால், அது மோசமான சில விளைவுகளை ஏற்படுத்தலாம்.

2007 ஜனவரியில் ஒரு பள்ளிக்கூட வளாகத்தில் நடந்த ஒரு தகராற்றில் சிரியா பிரஜையான ஒரு சிறுவனைக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் சுல்தான் கோஹெய்ல் மற்றும் அவரது சகோதரர் முஹம்மது கொஹெய்ல் என்ற இரு கனடியப் பிரஜைகளும் வேறு ஒருவரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். சகோதரர்களில் மூத்தவரான 23 வயது முஹம்மது கொஹெய்லை விசாரணை அதிகாரிகள் அடித்தும் உதைத்தும் இருந்ததாக குற்றம்சாட்டப்படுகிறது. பின்னர் முஹம்மது கொஹெய்ல் குற்றத்தை ஒப்புக்கொணடதாக வாக்குமூலம் வழங்கப்பட்டிருந்தது, அவர் கொலை செய்ததாக குற்றங்காணப்பட்டார். இன்னும் சில வாரங்களில் அவர் மீது மரண தண்டனை நிறைவேற்றப்படலாம் என்ற நிலை உள்ளது. பதினேழு வயதான இளைய சகோதரர் சுல்தான் மீது இளம் பிராயத்தினரை விசாரிக்கக்கூடிய ஒரு நீதிமன்றம் விசாரித்தது. இந்த நீதிமன்றத்துக்கு மரண தண்டனை வழங்கும் அதிகாரம் கிடையாது. சுல்தானுக்கு கசையடியும் ஓராண்டு சிறை வாசமும் 2008 ஏப்ரலில் தண்டனையாக வழங்கப்பட்டிருந்தது.



சர்வதேச பொதுமன்னிப்பு சபை, அக்டோபர் 2008 Index: MDE 23/031/2008

2699_saudi_CD_print_01_TAM.indd 2-3 11/2/09 15:40:41